DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.260/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 23rd day of August 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | கதைக்குளம் |
| பெயர் | : | ராமு | தாலுகா | : | கீழக்கரை |
| த/ பெ. | : | ஆறுமுகம் | சமயம் | : | இந்து |
| வயது | : | 35 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர். |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 23.08.2023</u>
<u>நேரம்: 12.55 பி.ப.</u>

1, 2 எதிரிகள் ஆஜர்.

சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 2, 3 வருடங்களுக்கு முன்பு எனது வயலில் வேலை செய்து விட்டு வீட்டில் இருந்த போது தடுமாறி கீழே விழுந்து விட்டேன். எனக்கும், எதிரிகளுக்கும் வயலில் தண்ணீர் பாய்ச்சுவதில் முன்விரோதம் இருந்து வந்தது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகளிடம் கேட்டு கொடுக்கச் செல்லி காவல்நிலையத்தில் சொன்னேன். அவர்கள் என்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசுதரப்பு கு.வி.</u>

கடந்த 28.12.2021ம் தேதியன்று மதியம் 01.30 மணியைப்போல எங்கள் வீட்டிற்கு வந்த எதிரிகள் எனது அக்கா, அம்மாவை அசிங்கமாக பேசி, கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதேப்போல அன்று மதியம் 04.00 மணியைப்போல எனது வீட்டின் முன்பு நின்ற போது எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி, என் வயலில் உள்ள தண்ணீயை எப்படி வெட்டி விடுவாய் என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பால் எனது தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அப்போது எனது அம்மாவும், அக்காவும் மேலும் அடிக்காமல் தடுத்த போது எதிரிகள் இருவரும் அசிங்கமாக பேசி, என் அம்மாவையும், அக்காவையும் கம்பால் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை பார்த்த மாதவன், செல்வராஜ், மலைமேகு ஆகியோர்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரிகள் கொல்லாமல் விட மாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து மறுநாள் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.08.23 17:06:45 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.260/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 23rd day of August 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | கதைக்குளம் |
| பெயர் | : | செல்வராஜ் | தாலுகா | : | கீழக்கரை |
| த/ பெ. | : | முருகேசன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 22 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர். |
| தொழில் | : | ஜீஸ் கடை | | | |

<u>நாள்: 23.08.2023</u>
<u>நேரம்: 01.05 பி.ப.</u>

1, 2 எதிரிகள் ஆஜர்.

சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து இராமநாதபுரம் ஜுஸ் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது சித்தப்பா. எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. தினமும் வேலைக்கு சென்று விடுவேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசுதரப்பு கு.வி.</u>

கடந்த 28.12.2021ம் தேதியன்று மதியம் 01.30 மணியைப்போல அ.சா.1–ன் வீட்டிற்கு வந்த எதிரிகள் அ.சா.1–ன் அக்கா, அம்மாவை அசிங்கமாக பேசி, கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதேப்போல அன்று மதியம் 04.00 மணியைப்போல அ.சா.1 வீட்டின் முன்பு நின்ற போது எதிரிகள் அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, அ.சா.1–ன் வயலில் உள்ள தண்ணீயை எப்படி வெட்டி விடுவாய் என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பால் அ.சா.1–ன் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அப்போது அ.சா.1 அம்மாவும், அக்காவும் மேலும் அடிக்காமல் தடுத்த போது எதிரிகள் இருவரும் அசிங்கமாக பேசி, அ.சா.1–ன் அம்மாவையும், அக்காவையும் கம்பால் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை பார்த்த நானும், மாதவன், மலைமேகு ஆகியோர்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரிகள் அ.சா.1–ஐ கொல்லாமல் விட மாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.08.23 17:06:52 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.260/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 23rd day of August 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | கதைக்குளம் |
| பெயர் | : | மலைமேகு | தாலுகா | : | கீழக்கரை |
| த/ பெ. | : | சண்முகவேல் | சமயம் | : | இந்து |
| வயது | : | 23 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர். |
| தொழில் | : | வீட்டில் உள்ளேன் | | | |

நாள்: 23.08.2023
நேரம்: 01.10 பி.ப.

1, 2 எதிரிகள் ஆஜர்.

சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து பி.ஏ படித்து வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மைத்துனர். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. நான் வெளியூர் சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசுதரப்பு கு.வி.</u>

கடந்த 28.12.2021ம் தேதியன்று மதியம் 01.30 மணியைப்போல அ.சா.1–ன் வீட்டிற்கு வந்த எதிரிகள் அ.சா.1–ன் அக்கா, அம்மாவை அசிங்கமாக பேசி, கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதேப்போல அன்று மதியம் 04.00 மணியைப்போல அ.சா.1 வீட்டின் முன்பு நின்ற போது எதிரிகள் அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, அ.சா.1–ன் வயலில் உள்ள தண்ணீயை எப்படி வெட்டி விடுவாய் என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பால் அ.சா.1–ன் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அப்போது அ.சா.1 அம்மாவும், அக்காவும் மேலும் அடிக்காமல் தடுத்த போது எதிரிகள் இருவரும் அசிங்கமாக பேசி, அ.சா.1–ன் அம்மாவையும், அக்காவையும் கம்பால் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை பார்த்த நானும், மாதவன், செல்வராஜ் ஆகியோர்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரிகள் அ.சா.1–ஐ கொல்லாமல் விட மாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.08.23 17:07:00 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.260/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 23rd day of August 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | வன்னிக்குடி |
| பெயர் | : | மோகன்தாஸ் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | முனியாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 35 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர். |
| தொழில் | : | டிராக்டர் | | | |

நாள்: 23.08.2023
நேரம்: 01.15 பி.ப.

1, 2 எதிரிகள் ஆஜர்.

சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:

நான் மேற்படி முகவரியில் வசித்து சொந்தமாக டிராக்டர் வைத்துள்ளேன். பார்வை மகஜரில் உள்ள இராண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்.** 2 வருடத்திற்கு முன்பு எனது டிராக்டருடன் உத்திரகோசமங்கை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு பற்றி வேற விபரம் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>**அரசுதரப்பு கு.வி.**</u>

கடந்த 29.12.2021ம் தேதியன்று காலை 07.00 மணியைப்போல போலீசார் வழக்கின் சம்பவயிடமான வாதி ராமன் என்பவரின் வீட்டை பார்த்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அதில் நானும் சுதாதேவி என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.08.23 17:07:06 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 260/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 23[th] day of August 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW –5** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | மகேந்திரன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | கருப்பையா | சமயம் | : | இந்து |
| வயது | : | 52 | ஜாதி | : | – |
| தொழில் | | சிறப்பு சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 23.08.2023</u>
<u>நேரம்: 01.25 பி.ப.</u>

1 , 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது உத்திரகோசமங்கை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உத்திரகோசமங்கை காவல்நிலைய குற்ற எண்.114/2021, U/s. 294(b), 323, 506(2) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.முத்துராமன் அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.12.2021ம் தேதி 20.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.முத்துராமன் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 ராமு என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமன புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.114/2021, U/s.294(b), 323, 506(2) IPC & 4 of TNPHW Act கீழ் வழக்குப் பதிவு செய்தார். வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். வாதியின் புகார் அ.சா.ஆ.4 ஆகும்.**

சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுதாதேவி, மோகன்தாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகும்.** அன்றைய தினமே சாட்சிகள் ராமு, முத்துவள்ளி, குருக்காள், மாதவன், செல்வராஜ், மலைமேகு, ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.பாவ்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று விபத்துப்பதிவேடு பெற்றுள்ளார். **அந்த விபத்துப் பதிவேடு அ.சா.ஆ.7 ஆகும்.** 1, 2 எதிரிகளை 16.01.2022 ம் தேதியன்று கதைக்குளம் கிராம அருகில் வைத்து கைது செய்து காவல்நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு விசாரணை அதிகாரியின் விசாரணையில் இருந்து முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்பட்ட 3 ம் எதிரி இருளாயி வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கிலிருந்து நீக்கம் செய்தும் தனியறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த தனியறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.** பின்பு அவரது விசாரணையை முடித்து அதே பிரிவுகளின் கீழ் 1, 2 எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்ததில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் 1, 2 எதிரிகள் மீது குற்ற இறதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.08.23 17:07:15 +0530